**Starting time 12.44 P.M.**

# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR

**O.S. No. 171/2018**

Deposition of **D.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 13.03.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : ஆனந்தன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை : புல எண். 206/4 சி -ல் உள்ள கிணற்றிலிருந்து பொது கிணற்று நீரை என்னுடைய நிலத்திற்கும், இதர நிலங்களுக்கும், சிமெண்ட் பைப் மூலம் தண்ணீர் கொண்டு செல்லும் பாத்தியம் என்று எதனடிப்படையில் கூறுகிறேன் என்றால், 03.06.2005 தேதியிட்ட வெங்கடாஜலம் மற்றும் பெருமாள் சேர்ந்து வாங்கிய கிரய பத்திரத்தின் அடிப்படையில் கூறுகிறேன். பி.வா.சா.ஆ 6-ல் மேற்படி கிணற்றிலிருந்து 2 லக்கமிட்டவர்களுக்கு சொந்தமான 0.61 செண்ட் நிலத்தின் வழியாக 370 அடி நீளத்தில் புதைக்கப்பட்டிருக்கும் சிமெண்ட் பைப் என்று குறிப்பிடப்பட்டிருப்பதால் அது 370 அடி நீளத்திற்கு மட்டும் தான் பொருந்தும் என்றால், சரியல்ல.

2. தாவா சொத்து விவரத்தில் அந்த 370 அடி நீளம் குறித்து சொல்லப்படவில்லை என்றால், சரியல்ல, சொல்லியுள்ளேன். இந்த 370 அடி நீள குழாய் பஞ்சாயத்து பாதையில் முடிவடைந்த பிறகு திரும்பவும் என்னுடைய பட்டா நிலமான புல எண். 207/5 பி க்கு செல்லும் வரையிலும் இடையே உள்ள பஞ்சாயத்து சாலையின் ஊடாக பைப்பை எடுத்துச் செல்ல பஞ்சாயத்திற்கு டிராக் ரெண்ட் செலுத்தியுள்ளேனா என்றால், பைப் போடும் போது செலுத்தினேன். 2007-க்கு பிறகு வரி செலுத்தவில்லை.

3. சட்டப்பூர்வமாக வரி செலுத்தாமல் நான் இந்த வழக்கு தாக்கல் செய்தது தவறு என்றால், சரியல்ல. மேற்படி சொத்தின் புல எண். 206/4 சில் உள்ள பொது கிணிற்றிலிருந்து 4 அடி அகல பொதுப்பைபாதையின் வழியாக மாதிரி வரைபடத்தில் காட்டியுள்ளபடி பைப் லைன் பதித்து 0.32-1/2 செண்ட் வழியாக தென்வடல் ரோட்டிற்கு வந்து மேற்படி தார்சாலையின் ஓரமாக தெற்கு நோக்கி சென்று பின்பு மேற்கு நோக்கி பொதுப்பாதையின் வழியாக புல எண். 207/5 பி-ல் உள்ள நிலங்களுக்கு பைப் லைன் மூலம் தண்ணீர் பாய்ச்சும் உரிமை உள்பட என்று எதனடிப்படையில் கூறியுள்ளேன் என்றால், பி.வா.சா.ஆ.3- ஆன 16.02.1998 கிரயப்பத்திரத்தின் அடிப்படையில் கூறியுள்ளேன்.

4. அவ்வாறு பி.வா.சா.ஆ.3 ல் குறிப்பிடப்படவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும், சரியல்ல. பி.வா.சா.ஆ.3-ல் புல எண்.207/5 பி என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், நெம்பர் போடவில்லை, வெங்கடாஜலம் என்ற பெயர் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.3-ல் உமக்கு என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், உமது இதர நிலங்களுக்கும் என்று குறிப்பிடப்படவில்லை என்றாலும், சரியல்ல.

5. புல எண். 206/4 சி -ல் உள்ள பொது கிணற்றிலிருந்து புல எண். 206/4 பி-ல் உள்ள நிலங்களை தவிர வேறு நிலங்களுக்கு எனக்கு நீர் எடுத்துச் செல்ல உரிமை இல்லை என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ.3-ல் கணேசன் குறிப்பிட்டுள்ள எங்களின் இதர நிலங்கள் என்ற நிலங்களின் புல எண் எனக்கு தெரியுமா என்றால், எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.3-ன் படியே நீர் எடுத்துச் செல்ல எனக்கு உரிமை உள்ள நிலையில் 1-ம் பிரதிவாதியிடம் சம்மத பத்திரம் வாங்கினேன் என்றால், எதிர்காலத்தில் தண்ணீர் விடவில்லை என்றால், பிரச்சனை ஆகிவிடும் என்பதால் தான் வாங்கினேன்.

6. என்னுடைய ஆவணங்களின் படி எனக்கு நீர் எடுத்துச் செல்லும் உரிமை எனக்கு இருந்திருந்தால் நான் பிரதிவாதிகளிடம் சம்மத பத்திரமே வாங்கியிருக்க மாட்டேன் என்றால், சரியல்ல. எனக்கு கிரயம் கொடுத்த கணேசனுக்கு பெருமாளுக்கு உரிமையான 61 செண்ட் நிலத்தின் வழியாக நீர் எடுத்துச் செல்லும் உரிமையை கிரயம் கொடுக்க உரிமையுள்ளதா என்றால், பெருமாளின் சம்மதத்தின் பேரில் தான் கணேசன் எழுதிக் கொடுத்தார்.

7. பெருமாளும் 1998 பத்திரத்தில் எழுதிக் கொடுத்துள்ளார். என்னுடைய பத்திரத்திலும்

இருக்கிறது பெருமாள் பத்திரத்திலும் இருக்கிறது. அவ்வாறான சங்கதி இரண்டு ஆவணத்திலும் இல்லை என்றாலும், அவ்வாறு எழுதிக் கொடுக்க கணேசனுக்கு உரிமையே இல்லை என்றாலும், சரியல்ல. 370 அடி என்பது பொதுகிணற்றிலிருந்து என்னுடைய நிலத்திலிருந்து பஞ்சாயத்து ரோடு வரைக்கும் முடிகிறது என்றால், ஆமாம்.

8. புல எண். 207/5பி-ல் பூமிக்கடியில் செல்லும் சிமெண்ட் பைப் யார், எப்போது போட்டார்கள் என்றால், 40 வருடங்களுக்கு முன்பாக கணேசன் போட்டார். பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் பொது கிணற்றிலிருந்து 2 லக்கமிட்டவர்களுக்கு 61 செண்ட் நிலத்தின் வழியாக 370 அடி நீளத்தில் பிதைக்கப்பட்டிருக்கும் சிமெண்ட் பைப்பில் பொதுவில் பாதியும் உள்பட மேற்படி கிணற்று நீரை மேற்படி சிமெண்ட் பைப்பின் வழியாக வெங்கடாஜலத்தின் நிலத்திற்கு கொண்டு சென்று பாய்ச்சுக் கொள்ளும் பாத்தியம் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர இதர நிலங்களுக்கு எடுத்து செல்லும் பாத்தியம் உண்டு என்று குறிப்படிபவில்லை என்றால், பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் அது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

9. பி.வா.சா.ஆ.7-ல் பெருமாள் தரப்பினர் அல்ல என்றால், ஆமாம். கணேசன் எழுதிக் கொடுத்த எந்த பத்திரத்திலாவது புல எண். 207/5பி நிலத்தில் உள்ள சிமெண்ட் பைப் வழியாக தண்ணீர் எடுத்துக் கொள்ளலாம் என்று எழுதிக் கொடுத்துள்ளாரா என்றால், சர்வே எண். போடவில்லை இதர நிலங்களுக்கு என்று எழுதிக் கொடுத்துள்ளார். பி.வா.சா.ஆ.8 ஆவணம் எழுதுவதற்கு உண்டான முத்திரைத்தாள் சங்கராபுரத்தில் வாங்கப்பட்டது என்றால், ஆமாம்.

10. சங்கராபுரம் எவ்வளவு தூரம் என்றாலும், அது எங்கிருக்கிறது என்றாலும், எனக்கு அது பற்றி தெரியாது. பத்திரம் வெங்கடாஜலம் பெயரில் வாங்கப்படவிலை என்றாலும், பெருமாள் எழுதிக் கொடுத்த பத்திரம் என்பதால் பெருமபாட்ள பெயரில் வாங்கப்பட்டுள்ளது. எழுதி வோங்குபவர் பெயரில் தான் பத்திரம் வாங்கப்படும் என்றாகூலும், எழுதி கொடுப்பவர் பெயரில் பத்தரம் வாங்கப்படுவதில்லை என்றாலும், சரியல்ல. பி.வா.சா.ஆ.8-ல் பெருமாள் என்று போடப்பட்டுள்ள கையெழுத்தும் கடைசி பக்கத்தில் வைடக்கப்பட்டுள்ள கைரேகையும் பெருமாளுதே இல்லை என்றாலும், சரியல்ல.

11. பி.வா.சா.ஆ.8ன் அடிப்படையில் தான் புல எண். 207/5பி நிலத்திற்கு நீர் எடுத்துச் செல்லும் உரிமையை நான், கோருகிறேன் என்றால், ஆமாம். பி.வா.சா.ஆ.8-ல் உள்ள

கையெழுத்தையும் ரேகையையும் பெருமாள் மறுத்துள்ள நிலையில் அதனை கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி வைக்க நான் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், ஆமாம். பி.வா.சா.ஆ.8 ஆவணத்தை எனது தகப்பனார் வெங்கடாஜலமும், அதில் கண்டுள்ள சாட்சிகளும் ஆவணத்தை எழுதியவரும் சேர்ந்து மோசடியாக தயாரிதுதுள்ளனர் என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ.8 ஆவணத்தை எழுதிபோது நான் பார்த்தேனா என்றால், நான் பார்க்கவில்லை.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

Ending Time: 01.21 P.M.

(ஒப்பம்/- N. திலகேஸ்வரி)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ.), ஆத்தூர்.